Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 15, 2023

புதன்கிழமை பெப்ரவரி 15, 2023 | ஒளி: 08 கதிர்: 209 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# சின்னத் தேர்தல் தாமதிக்கும்?

**சட்டமா அதிபரிடம் இருந்து ஆதரவு இல்லை என்றும் அறிவிப்பு**

**வாக்குச்சீட்டு இன்று விநியோகிக்கப்படாது**

**கட்சி செயலாளர்களுக்கு அறிவித்தார் ஆணையாளர்**



எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதியன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் சாத்திக் கூறுகள் காணப்படுவதாக அறியமுடிகிறது.

குறித்த தினத்தில் தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல் ஆணைக்குழு இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் விடுத்துள்ள அறிவிப்புகள் மூலம் தெரியவருகிறது. தேர்தலுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகளை இன்று (15) விநியோகிக்க முடியாது என்று கட்சியின் பொதுச் செயலாளர்களிடம் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா செவ்வாய்க்கிழமை (14) காலை இடம்பெற்ற சந்திப்பில் அறிவித்துள்ளார்.

---

மின்சாரக் கட்டணம் பேச்சில் இணக்கப்பாடு இல்லை

## தீர்மானத்தை இன்று எதிர்பார்ப்பதாக சபாநாயகர் தெரிவிப்பு

மின்சாரக் கட்டணம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை இணைந்து நடத்திய கலந்துரையாடல், இணக்கப்பாடு இன்றி நிறைவடைந்ததாக மின்சார சபையின் அதிகாரிகள், பாராளுமன்றத்தில் தேசிய பேரவைக்கு செவ்வாய்க்கிழமை (14) அறிவித்தனர்.

தொடர்ச்சி P2

---

தபால் மூல வாக்களிப்பு

## காலவரையறையின்றி ஒத்திவைப்பு




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை (14) அறிவித்தது.

தொடர்ச்சி P2

---

## தேர்தலை நடத்தக் கூடாது என்ற எண்ணம் இல்லை

**முன்னர் கடன் பெற்றும், பணத்தைச் அச்சிட்டும் அரசாங்கங்கள் தேர்தலை நடத்தியிருந்தன**

மஹேஸ்வரி விஜயனந்தன்



தேர்தல் நடத்தக்கூடாது என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை அரசியல் பிரச்சினையல்ல எனவும், ஏனைய நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு இணங்காததன் விளைவு எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

தினேஷ் ஷாஃப்டரின்

## இரத்த, உடல் மாதிரிகளை பாதுகாக்குமாறு கட்டளை



பிரபல தொழிலதிபரான தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரிகள் மற்றும் உடல் மாதிரிகளை பரிசோதனைக்காக பெற்றிருந்தால் அவற்றை பாதுகாக்குமாறு கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி மற்றும் அரசாங்க பகுப்பாய்வாளர் ஆகியோருக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (24) உத்தரவிட்டது.

பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி

தொடர்ச்சி P2

---

சுகாதார துறையை மேம்படுத்துவதற்கு

## 3.8 மில். டொலர் வழங்க ஜப்பான் இணக்கம்



சுகாதார சேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்தி இலங்கையில் சுகாதாரத் துறையின் சுகாதார சேவைகள் விநியோகத் தொகுதியை மேம்படுத்துவதற்காக 05 பில்லியன் ஜப்பான் யென்களை (அண்ணளவாக 38 மில்லியன் அமெரிக்க டொலர்) வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய மற்றும் அவசர சுகாதார சேவைகளை தங்குதடையின்றி மேற்கொண்டு செல்வதை உறுதிப்படுத்துவதற்கான எரிபொருள் (டீசல்) விநியோகித்தை உறுதிப்படுத்தவே மேற்குறிப்பிட்ட

தொடர்ச்சி P2

---



## 7 வகையான பிளாஸ்டிக் உற்பத்திகளுக்கு தடை

மஹேஸ்வரி விஜயனந்தன்

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தி அகற்றப்படும் 7 வகையான பிளாஸ்டிக் உற்பத்திகளை இறக்குமதி செய்யவும் நாட்டில் உற்பத்தி செய்யவும் விற்பனை செய்தல் மற்றும் உள்நாட்டில் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதென அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

## நெல் கொள்வனவு குறித்த சுற்றறிக்கை வெளியானது

**கொள்வனவு செய்யப்படும் நெல், உடனடியாக அரிசியாக்கப்பட்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் விநியோகிக்கப்படும்**

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பை விநியோகிக்கும் வேலைத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கை திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், திறைசேரி செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தனவின் கையொப்பத்துடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



---




வெள்ளியன்று இடம்பெறும்

## வட்டமேசை மாநாட்டில் இலங்கை பங்கேற்கிறது

**நாணய நிதியம், உலக வங்கி, இந்தியாவால் நடத்தப்படுகிறது**

சீனா, இந்தியா, சவூதி அரேபியா, அமெரிக்கா உள்ளிட்ட ஜி7 நாடுகளின் பங்குபற்றுதலுடன் காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக, எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள கடன் தொடர்பான வட்டமேசை மாநாட்டில் இலங்கையும் பங்கேற்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

---

## பிரபாகரன் இருக்கும் இடத்தை கூறினார் காங்கிரஸ் தலைவர்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு இருக்கும் இடம் தொடர்பில் தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருச்சி வேலுச்சாமி யூகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் யூடியூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "நந்திக் கடலில் மரணம் அடைந்து இரவு முழுவதும்

தொடர்ச்சி P2

---

# நீதிபதியின் காரை திருடியவர் சிக்கினார்



குளியாப்பிட்டி மேலதிக மாவட்ட நீதிபதி அமில சம்பத் ஆரியசேனவின் 6 மில்லியன் பெறுமதியான சொகுசு காரைத் திருடிய சந்தேக நபர் வத்தளை, ஒலியமுல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், காரும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தனை, மடபாத்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றை வாடகைக்கு பெறுவது போல சென்று, இரண்டு மாடி வீட்டில் நீதிபதியை வைத்து பூட்டிவிட்டு காரையும் சந்தேகநபர் திருடிச் சென்றார்.

மேலதிக நீதிபதியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சந்தேகநபர், கார் மற்றும் காரில் உள்ள ஆவணங்களை ஒப்படைக்க 5 இலட்சம் ரூபாய் வழங்குமாறு கோரியுள்ளார்.

அழைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அலைபேசி இலக்கத்தின்

தொடர்ச்சி P2

---

## பௌத்த சமூகத்திடம் மன்னிப்பு கோர தயார்

**சேபால் அமரசிங்க அறிவிப்பு; விளக்கமறியலும் நீடிப்பு**

**சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட கருத்துகளால் பௌத்த சமூகத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது**



கண்டி ஸ்ரீ தலதா மாளிகை குறித்து அவமரியாதையான கருத்துகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சேபால் அமரசிங்க, உலகளாவிய ரீதியில் உள்ள பௌத்த சமூகத்திடம் மன்னிப்பு கேட்கத் தயார் என்று செவ்வாய்க்கிழமை (14) அறிவித்தார்.

கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சேபால் அமரசிங்கவின் சட்டத்தரணி தர்ஷன குருப்பு மேற்குறிப்பிட்ட விடயத்தை மன்றுக்கு அறிவித்தார்.

அத்துடன், அவரின் விளக்கமறியல் உத்தரவும் பெப்ரவரி 21ஆம் திகதிவரை நீதவானால் நீட்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சின்னத் தேர்தல் தாமதிக்கும்?

உரிய பணம் செலுத்தப்படும் வரை வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படமாட்டாது என்று அரசாங்க அச்சக திணைக்களம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, தபால் மூல வாக்களிப்புக்குத் தேவையான வாக்குச் சீட்டுகள் தொடர்பான பிரச்சினையை தேசிய தேர்தல் ஆணைக்குழு எதிர்கொண்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின் போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று உயர்நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுமாறும் பின்வாங்க வேண்டாம் என்றும் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கூறியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தேசிய தேர்தல் ஆணைக்குழு வளாகத்தில் இருந்து வெளியேறுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அவர், சட்டமா அதிபரிடம் இருந்து தனக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்றும் மீண்டும் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்ததாக மத்தும பண்டார எம்.பி குறிப்பிட்டார்.

இதேவேளை, நிதி பிரச்சினைகளை தேசிய தேர்தல் ஆணைக்குழுவே தீர்க்க வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று ஆணைக்குழுவின் சந்திப்பின் மூலம் தெரியவருவதாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவும் தெரிவித்தார்.

# தீர்மானத்தை இன்று எதிர்பார்ப்பதாக சபாநாயகர் தெரிவிப்பு

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக இதற்கு முன்னர் தேசிய பேரவை கூடிய போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பேரவைக்கு அறிவித்ததாகவும், அதனால் இன்று (15) இது தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என்று தான் நம்புவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இரண்டு தரப்பினரும் கூடிக் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்குமாறு திங்கட்கிழமை (13) முற்பகல் கூடிய தேசிய பேரவை அறிவித்திருந்தது.

அதற்கமைய, திங்கள் பிற்பகல் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும், இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க முடியாமல் போனதாகவும் அதிகாரிகள் இதன்போது தேசிய பேரவைக்கு அறிவித்தனர்.

ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை கூடி இறுதித் தீர்மானம் எடுக்க எதிர்பார்ப்பதாக இதன்போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தேசிய பேரவை, சபாநாயகர் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நேற்று (14) கூடிய போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான டி.வி. சானக, இந்திக்க அநுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, சாகர காரியவசம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேபோன்று, பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீரவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

# இரத்த, உடல் மாதிரிகளை பாதுகாக்குமாறு கட்டளை

அனுஜ பிரேமரத்ன முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தாார்.

இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், சந்தேக நபர்களோ அல்லது மரணத்துக்கான சரியான காரணமோ இதுவரை நேரடியாகக் கண்டறியப்படவில்லை என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஷாப்டரின் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சீ.ஐ.டி) இதுவரை 175 க்கும் மேற்பட்டோரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ள நிலையில், குறைந்தபட்சம் 14 வழக்கு பொருட்கள் மற்றும் மாதிரிகள் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காலவரையறையின்றி ஒத்திவைப்பு

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான நிதி கிடைக்காததால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடைபெற உள்ளதாகவும் அன்றைய தினம் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் 28ஆம் திகதி வாக்களிக்க முடியும் என்றும் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

முன்னதாக திட்டமிட்டபடி இன்றையதினம் (15) தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகளை வழங்க முடியாது என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சியின் செயலாளர்களுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 3.8 மில். டொலர் வழங்க ஜப்பான் இணக்கம்

மானியம் வழங்க ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த நிதி வழங்கப்படவுள்ளது.

குறித்த வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# தேர்தலை நடத்தக் கூடாது என்ற எண்ணம் இல்லை

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இதற்கு முன்னர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் பெற்றும், பணத்தைச் அச்சிட்டும் அரசாங்கங்கள் தேர்தலை நடத்தியிருந்தன.

ஆனால் தற்போது நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் வெளிநாட்டுக் கடன்களைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் ஓரளவேனும் நெருக்கடியை குறைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர், நாட்டின் கடனை மறுசீரமைக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதால் பணம் அச்சிடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

திறைசேரி அன்றாடச் செலவுகளை ஈடுகட்ட பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் நிதிப் பிரச்சினையை எதிர்நோக்கும் அதேவேளை இந்த நாட்டின் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் முடங்கும் தருணம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும் தேர்தலை நடத்தாமல் இருப்பது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை என்றும் திறைசேரிக்கு பொறுப்பான செயலாளர் தற்போதைய நிலைமையின் தீவிரம் குறித்து நீதிமன்றில் காரணங்களை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நெல் கொள்வனவு குறித்த சுற்றறிக்கை வெளியானது

2022/2023 பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு நெல் அறுவடைக்கு நியாயமான விலையை வழங்குவதும், மேலதிக நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்வதும், தற்போதைய கடினமான பொருளாதார நிலைவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

2022/2023 பெரும் போக நெல் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாவட்டச் செயலாளர்களால் நாட்டரிசி வகை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இதன்படி, அதிகபட்ச ஈரப்பதம் 14% மற்றும் 9% தரம் குறைந்த 01 கிலோ நெல் 100 ரூபாய்க்கும், 14% இனை மிஞ்சும் மற்றும் 22% அல்லது அதற்கும் குறைவான ஈரப்பதம் கொண்ட 01 கிலோ நாட்டரிசி வகை நெல் 88 ரூபாய்க்கும் கொள்வனவு செய்யப்படும்.

நெல் கொள்முதல் நடவடிக்கையின் போது அது தொடர்பான நெல்லை கையேற்பது களஞ்சியப்படுத்துவது அதனுடன் தொடர்புள்ள ஆவணங்களைப் பேணுவது, கணக்குகளை வைத்திருத்தல் ஆகிய பொறுப்புகள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு, வழங்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பு உடனடியாக அரிசியாக மாற்றப்பட்டு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நெல்குத்தும் பணியை நிறைவு செய்யும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் நெல் குத்தும் திறனை பரிசீலித்து, நெல்லை கொள்முதல் செய்ய தேவையான பணம், ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பிற்கு அமைய, விவசாயி ஒருவரிடமிருந்து அதிகபட்சமாக 01 ஏக்கர் வரை 2,000 கிலோவும், 1-2 ஏக்கர் வரை 4,000 கிலோவும், 02 ஏக்கருக்கு மேல் 5,000 கிலோவும் நெல் கொள்வனவு செய்யப்படும்.

தங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து மாத்திரமே நெல் கொள்முதல் செய்யப்படுவதை அனைத்து மாவட்டச் செயலாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெரும் போகத்தில் கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பு அரிசாக மாற்றப்பட்டு அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை உள்வாங்கும் வகையில், ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் இரண்டு மாத காலத்திற்கு வழங்கப்படும்.

நெல் கொள்முதல் திட்டத்தை வெற்றியடையச் செய்ய மாவட்டச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய, நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை தேசிய முன்னுரிமையாகக் கருதி அரச செலவை மட்டுப் படுத்தி, அறுவடைக் காலத்தில் முழு அரச சேவையும் அர்ப்பணிப் புடனும் முன்மாதிரியாகவும் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

# வட்டமேசை மாநாட்டில் இலங்கை பங்கேற்கிறது

எத்தியோப்பியா, சாம்பியா, கானா ஆகிய ஜி20 பொதுவான கட்டமைப்பின் கீழ் கடன்களை கோரிய நாடுகளின் அதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஜி 20 குழுவின் தற்போதைய தலைவரான இந்தியா ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படவுள்ளதுடன், ஜி20 நிதி அதிகாரிகள் எதிர்வரும் 23 முதல் 25 ஆம் திகதி வரை வட்டமேசையின் நேரடி கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

வட்டமேசையில் அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் தனியார் துறை பங்கேற்பாளர்களின் பாரிஸ் கிளப் அதிகாரிகளும் பங்கேற்கவுள்ளனர்.

பாரம்பரிய கடனாளிகள் முதல் பணக்கார பொருளாதாரங்களில் புதிய கடன் வழங்குபவர்கள் வரை, அத்துடன் கடன் நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடுகள் மற்றும் தனியார் துறையை ஒன்றிணைப்பதே வட்டமேசை மாநாட்டின் நோக்கம் என்று நாணய நிதியம் அறிவித்துள்ளது.

# 7 வகையான பிளாஸ்டிக் உற்பத்திகளுக்கு தடை

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இது தொடர்பில் கடந்தாண்டு சுற்றாடல் அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதுடன், குறித்த யோசனை தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளுடனான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த நிபுணர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு, கீழ்க்காணும் பிளாஸ்டிக் உற்பத்திகளை இறக்குமதி செய்தல், நாட்டில் உற்புத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் உள்நாட்டில் பயன்படுத்துதல் என்பன இந்த வருடம் ஜூன் மாதம் 1ஆம் திகதியிலிருந்து தடை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

இதற்கமைய, ஒருமுறை மாத்திரம் பயன்படுத்துகின்ற பானம் அருந்தும் பிளாஸ்டிக் ஸ்ட்ரோ மற்றும் கலக்கும் உபகரணங்கள் பிளாஸ்டிக் மூலம் தயாரிக்கப்படும் யோகட் கரண்டிகள், உள்ளிட்ட ஒருமுறை பயன்படுத்தி அகற்றப்படும் பீங்கான், கோப்பை (யோகட் கப் தவிர்ந்த), கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள் மற்றும் கத்திகள் பிளாஸ்டிக் மாலைகள் பிளாஸ்டிக் மூலம் தயாரிக்கப்பட்ட இடியப்ப தட்டுகள் என்பன தடை செய்யப்படவுள்ளன என்றார்.

# பிரபாகரன் இருக்கும் இடத்தை கூறினார் காங்கிரஸ் தலைவர்

சடலமாக பிரபாகரன் மிதந்ததாக இலங்கை அரசு கூறுகிறது. அப்படி மிதந்திருந்தால் அந்த சடலத்தின் கண்கள் மீன்களால் சிதைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்த சடலத்தின் கண்கள் திறந்த நிலையில் தெளிவாக இருந்தன. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

எல்டிடிஈயினர் யாரும் தங்கள் சீருடையில் பெயரை குறிப்பிட்டிருக்க மாட்டார்கள். அந்த பழக்கம் அவர்களிடம் இல்லை. ஆனால் இலங்கை இராணுவம் காட்டிய பிரபாகரன் உடலில் இருந்த சீருடையில் அவரது பெயர் இருந்தது. அதனால் அது பிரபாகரனே இல்லை.

அந்த ஏற்பாட்டைச் செய்தவர்கள் ஏதோ நோக்கத்துக்காக செய்துள்ளனர். பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார். அவர் உயிரோடு அவுஸ்திரேலியாவில் இருக்கலாம் என கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# நீதிபதியின் காரை திருடியவர் சிக்கினார்

ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிபதியின் சகோதரன் போல் நடித்த பொலிஸ் உத்தியோகத்தர், நீதிபதி அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காரை திருப்பி கொடுப்பதற்கு பணம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 27 வயதுடைய சந்தேக நபர் வத்தளை பிரதேசத்துக்கு அழைத்து அவரை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகமவில் உள்ள சந்தேகநபரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இரண்டு வான் துப்பாக்கிகள், நான்கு கத்திகள், விஷத் திரவம் அடங்கிய போத்தல் மற்றும் மிளகாய் பொடி அடங்கிய பையொன்றும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் குறித்து, பிலியந்தலை பொலிஸார் மற்றும் கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பௌத்த சமூகத்திடம் மன்னிப்பு கோர தயார்

தலதா மாளிகை குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதை அடுத்து, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

அதன்பின்னர், அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஜனவரி 5ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட சேபால், விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சந்தேகநபர் சமூக வலைத்தளம் மூலம் வெளியிட்ட கருத்துகளால் பௌத்த சமூகத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளில் இருந்தும் அவர் பணம் பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# “பழக்கத்தை மாற்றவும்”



கிருஸ்ணராஜா செல்வி
(ஊடகத்துறை மாணவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சமூகப் பிரச்சினைகளில் ஒன்றான போதைப்பொருள் பாவனை உலகளாவிய அளவில் காணப்படுகின்றது. போதைப்பொருள் என்பது மனிதன் நுகரும் அல்லது உட்செலுத்தும் போசாக்கு நிறைந்த உணவுவகைகளைத் தவிர்த்து உடல், உள தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்கள் போதைப் பொருட்கள் என ஸ்டட் மேன் எனும் அறிஞரின் மருத்துவ அகராதி கூறுகிறது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் சில மருந்துகளும் போதைப்பொருள்களாக தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் போதைப்பொருட்கள் பாவனை மற்றும் நுகர்வின் காரணமாக 11.8 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். அதிலும் குறிப்பாக சட்ட விரோத போதைப்பொருட்கள் காரணமாக 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை இறக்கின்றனர் என உலக போதைப்பொருள் அறிக்கையிடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் 2021ம் ஆண்டில் மட்டும் சுமார் 275 மில்லியன் மக்கள் போதைப்பொருளை பயன்படுத்தியுள்ளனர். அதே நேரம் 36 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் போதைப்பொருள் பயன்பாட்டுக் கோளாறுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக வியன்னா கூறுகிறது.

அதுமட்டுமன்றி கடந்த 24 ஆண்டுகளில் உலகின் சில பகுதிகளில் கஞ்சாவின் பாவனை நான்கு மடங்காக அதிகரித்திருப்பதாக 2021ம் ஆண்டிற்கான மருந்து அறிக்கையின்படி UNODC கூறுகிறது.

போதைப்பொருள் எனும் போது இரசாயன பதார்த்தங்களை உள்ளடக்கிய ஒரு கலவை என இதனை வரையறுக்கலாம். இவை சட்ட ரீதியாக விலக்கப்பட்டவையாகக் காணப்படுவதுடன் உடலுக்கு தீங்கை விளைவிப்பதாகவும் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி உயிரியல் ரீதியான செயற்பாடுகளிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தவல்லன.

போதைப்பொருளுக்கு அடிமையாதல் என்பதுவும் பாரிய ஒரு பிரச்சினையாகும். போதைப்பொருளுக்கு அடிமையாதல் என்பது ஒரு தனியன் அல்லது குழு உளவியல் ரீதியாக அல்லது உடலியல் ரீதியாக குறிப்பிட்ட போதைப்பொருட்களுக்கு தொடர்ச்சியாக உட்படுவதனைக் குறிக்கும். இதனால் குறிப்பிட்ட குழு அல்லது தனியன் அவ் போதைப்பொருள் இன்றி வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அத்தகைய போதைப்பொருட்களாக மதுபானம், ஐஸ், மாவா, ஹெரோய்ன், ஒபியஸ்ட், செடேடிங், இன்ஹெலன்ஸ், புகையிலை போன்றன உலக நாடுகளில் அதிகம் புழக்கத்திலுள்ள போதை வஸ்த்துக்களாக காணப்படுகின்றன. இவை அதிகம் இலங்கை மற்றும் இந்தியா தென்னாசிய நாடுகளிலேயே அதிகம் புழக்கத்தில் உள்ளவையாகவும் காணப்படுகின்றன.

இதில் இலங்கையை எடுத்து நோக்கினால் ஹெரோய்ன், கொக்கைன், கஞ்சா, அபின், ஹாமீஸ், சாராயம், கசிப்பு, சிகரெட், புகையிலை, சுருட்டு, ஐஸ், மாவா, போன்ற போதைப்பொருட்கள் அதிகம் உபயோகிக்கும் போதைப்பொருட்களாக காணப்படுகின்றன.

இவற்றில் மாவா, கஞ்சா போன்ற போதை வஸ்த்துக்கள் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு மத்தியிலும் கொக்கைன், கெஸ்டஸி போன்றன சமூகத்தில் உயர்ந்த மட்ட குழுக்களுக்கு மத்தியிலும் அதிகம் புழக்கத்தில் உள்ளவையாகக் காணப்படுகின்றன. இலங்கையை பொருத்தவரை சமீபத்திய கணக்கெடுப்பின் படி 250,000 நபர்கள் பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டுள்ளதோடு ஹெரோய்ன் பாவனைக்கு மாத்திரம் 60,000 இளைஞர் யுவதிகள் அடிமைப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

> **மாவா, கஞ்சா போன்ற போதை வஸ்த்துக்கள் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு மத்தியிலும் கொக்கைன், கெஸ்டஸி போன்றன சமூகத்தில் உயர்ந்த மட்ட குழுக்களுக்கு மத்தியிலும் அதிகம் புழக்கத்தில் உள்ளவையாகக் காணப்படுகின்றன**

இதில் 15 தொடக்கம் 25 வயதுக்குற்பட்ட மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமைப்படுவது அதிகரித்துள்ளது. மேலும் மாணவர்கள் மத்தியில் பாபுல், பீடா, பாண்பராக், மாவா, ஐஸ்பேக் போன்றன அதிகம் பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் சில மாணவர்கள் வகுப்பறைக்குள்ளேயே அவற்றை நுகர்கிறார்கள் எனவும் அத்துடன் இத்தகைய செயற்பாடுகளில் 13 தொடக்கம் 15 வயதுடைய மாணவர்களும் ஈடுபட்டுள்ளதாகவும் ஜெயவர்த்தன 2018ம் ஆண்டு தனது ஆய்வின்படி குறிப்பிடுகிறார்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை மற்றும் கைதுகள் தொடர்பில் பார்க்கும் போது போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2017ம் ஆண்டில் 81.56 சதவீதம் ஆகவும் இதனை 2020ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஹெரோய்ன் வைத்திருந்தமைக்காக 36 சதவீதம் ஆனோரும், கஞ்சா வைத்திருப்பதாக 63.8 சதவீதம் ஆனோரும் கைது செய்யப்பட்டனர். இதில் மேல் மாகணத்திலேயே 61 சதவீதமானோர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இக் குற்றச் செயலுடன் தொடர்புடையவர்கள் 15 வயது தொடக்கம் உள்ளவர்களே எனவும் UNDDCB 2020ம் ஆண்டு குறிப்பிட்டுள்ளது.

2017ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எடுத்து பார்க்கும் போது மேல்மாகாணத்தில் இவ்வாறான போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதும் அதிலும் குறிப்பிட்ட போதைப்பொருள் விற்பனையாளர்கள் பாடசாலை மாணவர்களை குறிவைத்திருப்பதையும் பல்வேறு ஊடக அறிக்கையிடல்களிலும் அறியக் கூடியதாக உள்ளது. அதிலும் சமீபத்தில் ஏறத்தாழ 40,000 மாணவர்கள் பெரும்பாலும் மேல்மாகாணத்தை சேர்ந்தவர்களே போதைப்பொருள் பாவனையாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர்.

தற்சமயம் 2022ம் ஆண்டு நிலவரப்படி பல்வேறு போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளவர்களின் எண்ணிக்கை 500,000 எனவும் இவர்களில் 75 சதவீதமானோர் 14 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட போதைப்பொருட்களுக்கு பல மாணவர்கள் அவர்களை அறியாமலே பழக்கப்படுகின்றமைதான் கவலைக்குரிய விடயமாகும். அன்றாடம் அவர்கள் வாங்கி விரும்பி உட்கொள்ளும் உணவுப்பொருட்களிலும், இனிப்புக்களிலும், குடிபானங்களிலும் அவர்களுக்கே தெரியாமல் குறிப்பிட்ட போதைப்பொருள் கலக்கப்பட்டு அவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அவ்வாறான குறிப்பிட்ட உணவுப்பொருளின் சுவைக்கு பழக்கப்படும் இளையோர் சமுதாயம் மீண்டும் மீண்டும் அவற்றை நுகரத்தலைப்படுகின்றனர் இவ்வாறே எமது நாட்டு இளையோர் சமுதாயம் போதைப்பொருட்களுக்கு அடிமைப்படுத்தப்படுகின்றது.

இலங்கை திறந்த பொருளாதார கொள்கையுடைய நாடு என்பதால் போதைப் பொருளின் கிடைப்பனவு தன்மை அதிகமாக இருப்பது மாத்திரம் இளைய தலைமுறை போதைக்கு அடிமையாக காரணம் அல்ல, உணவுப் பொருட்களில் திட்டமிட்டு அவற்றை கலவை செய்து விற்பனைசெய்யும் சில விஷமர்களும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய புற்றுநோய்க் காரணிதான். இவ்வாறான பிரச்சினைகளை குறைக்கவும் நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் சட்டங்களை இறுக்கப்படுத்துவதும் தண்டணைகள் கடுமையாக்கப்படுவது மாத்திரம் போதுமானது அல்ல பாடசாலைகளில் பால்நிலை அடிப்படையான கல்விகளை அறிமுகம் செய்வது போன்று இது போன்ற போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வுகளையும் மாணவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் பெற்றோர்களுக்கும் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

# தீருமா தாயின் தாகம்?



இராஜேந்திரன் தனுஷியா
(நான்காம் வருடம், ஊடகக்கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்)



இந்தப்பூமியானது அனைத்து உயிர்களுக்குமானதாகும். ஆனால் மனித இனமானது இனம், மொழி, சாதி, ஏழ்மை, அந்தஸ்த்து, அரசியல் என பல்வேறு ஏற்றத்தாழ்வுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அழகிய வளம்மிக்க எம் நாட்டிலும் பல்வேறுபட்ட பாகுபாடுகள் காணப்படுகின்றன. இப்பாகுபாடுகளினால் வசதிபடைத்தவர்கள் மேலும் வசதிகொண்டவர்களாகவும், ஏழ்மையிலுள்ளவர்கள் மேலும் ஏழ்மையானவர்களாகவும் வாழ்கின்றார்கள்.

எம் நாட்டின் வடபகுதியான முத்திசையும் கடலைதாலாட்டும் யாழ் குடாநாட்டின் தென்மேற்குப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட அழகிய மணல் மேடுகளையும், கண்டல் தாவரங்களையும் பாதுகாப்பு அரணாக கொண்டும் ஒருங்கே வயல்வெளிகளும் அழகு சேர்த்து திகழும் கௌதாரிமுனை என்னும் கிராமம்; பனைகளும், கடலலையின் தாலாட்டும் நெற்பயிர்களின் தலையாட்டல்களும் அழகிய கண்டல் தாவரங்களும் நீண்ட பரந்த அகலமும், உயரமும் உடைய சிறுமலைமேடுகள் அல்லது மலைப்பகுதிகள் போன்ற மணல் மேடுகளும் இப்பகுதிக்கு மேலும் அழகுசேர்க்கின்றன. இப்பிரதேசத்தில் இலங்கையின் பொலன்னறுவையினை ஆண்ட கி.பி 11ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த சிவநேயச்செல்வர்கள் என அழைக்கப்படும் சோழ மன்னர்களினால் உருவாக்கப்பட்ட சிவன் ஆலயமும் இன்னும் சிறப்பூட்டுவதாக அமைகின்றது.

மேலும் இப்பிரதேசமானது யாழ்ப்பாணம் மன்னார் செல்லும் A32 பிரதான வீதியில் இருந்து 14KM நீளமான மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒடுங்கிய நிலப்பரப்பாகும். இக் கௌதாரி முனை பிரதேசமானது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையினை கொண்ட பகுதி என பேராசிரியர் க.புஸ்பரட்ணம் கூறுகின்றார்.

இப் பிரதேசமக்கள் 2300ஆண்டுகளிலிருந்து இந்தியா, சீனா, அரேபியா போன்ற நாடுகளுடன் தொடர்பை பேணி வந்ததாகவும் தெரிவிக்கின்றார். இவ்வாறு இப்பிரதேசமானது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் வாழ்ந்த பல மக்கள் யுத்த காலப்பகுதியில் அப்பகுதியினை விட்டு யாழ்ப்பாணம், பூநகரி போன்ற பகுதிகளில் குடியேறியுள்ளனர். இதனால் அங்கு காணப்படும் பலகாணிகள் தனியாருக்கு சொந்தமானதாகவே இருக்கின்றது.

இங்கிருந்து யுத்தகாலத்தில் வெளியேறிய மக்கள மீண்டும் தமது சொந்த நிலங்களுக்கு குடியேறாமைக்கான காரணங்கள் பலகாணப்படுவதாக அப்பிரதேசவாசியான புனிதமலர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தெரிவிக்கின்றார்.

அந்தவகையில் அவர் முன்வைத்தகாரணங்கள் வெறும் காரணமாகவே இல்லாது அவருடைய தீராததாகமாகவே காணப்படுகின்றது.

அவற்றில் மிகமுக்கிய அம்சமாக போக்குவரத்து வசதியின்மையையே குறிப்பிடுகின்றார். A32வீதியிலிருந்து இப்பிரதேசத்திற்கு செல்வதற்கு 14KMநீளம் கொண்ட ஒரு வீதி மட்டுமே காணப்படுகின்றது. ஆயினும் அவ் வீதியானது பாரிய குழிகளை கொண்டதாக சீரற்று காணப்படுகின்றது.

அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் பூநகரிக்கு செல்லவேண்டுமாயின் காலை 7 மணியளவில் விநாசியோடை பாடசாலைக்கு முன் பகுதியில் காணப்படும் பேரூந்தில் தமது பயணத்தை தொடர முடியும். மீண்டும் திரும்புவதற்கு அப்பேரூந்தினை மாலை 5மணிவரை எதிர்பார்த்து இருக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக பூநகரிபிரதேசசெயலகம் செல்ல வேண்டுமாயின் காலை 07 மணிக்குள் 02 KM நடந்து சென்று விநாசியோடை பாடசாலைக்கு முன் தரித்து நிற்கும் பேரூந்தில் ஏறிப்பயணத்தை மேற்கொண்டு பிரதேசசெயலக அலுவல்களை 10 மணியளவில் முடித்தாலும் மீண்டும் எமது பகுதிக்கு செல்வதற்கு பிற்பகல் 05 மணிவரை காத்திருக்க வேண்டிய நிலை அல்லது அங்கிருந்து நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

பூநகரி பகுதியில் இருந்து பேரூந்தில் ஏற்றிச் செல்லப்படும் பொருட்கள் மற்றும் மக்கள் விநாசியோடை பாடசாலைக்கு முன் இறக்கப்படுவார்கள் ஏனெனில் மிகுதியாகக் காணப்படும் 2KM அளவிலான பாதை மிகவும் மோசமான நிலையில் அதாவது வாகனங்கள் பயணிப்பதற்கான போதிய நிலையற்றதாக காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

அங்கு காணப்படும் மணல் மேடுகள் காற்றின் வேகத்தினால் பயணப்பாதையினை இடைமறித்துள்ளதால் மன்னித்தலைக்கு வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது அவர் கூறுகையில் சில மாதங்களுக்கு முன்பு தமது அயல் வீட்டில் வசிக்கும் ஒருவர் தீடிரென நோய்வாய்ப்பட்ட நிலையில் அவரை பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் வாகனங்கள் செல்வதற்கு போதிய வசதியின்மையில் நோயாளர் காவுவண்டிக்கு அழைப்பினை மேற்கொண்ட போது காவுவண்டியானது 2KMக்கு முன்னதாகவே நிறுத்தப்பட்டது இதனால் குறித்த நோயாளியை காவுவண்டிக்கு கொண்டு செல்வதற்கு முன்னரேயே அவர் இறந்து விட்டார்.

இவ்வாறான போக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களையும் 116குடும்பங்கள் வாழும் அப்பகுதியில் சுகாதாரம் மற்றும் மருத்துவம் தொடர்பிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது.

இங்குவாழும் மக்கள் வேளாண்மை, கடற்தொழில், சீவல் தொழில் போன்றவற்றை தமது ஜீவனோபாய தொழில்களாக கொண்டுள்ளனர். மேலும் சிலர் பனை உற்பத்தி தொடர்பான சுய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்தொழில் மூலம் கிடைக்கின்ற பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக எம் பிரதேசத்தில் இருந்து கடல் வழியாக 2KM தூரத்தில் காணப்படும் யாழ்ப்பாணத்தின் அரியாலைப்பகுதிக்கு கொண்டு செல்வதாக தெரிவிக்கினார். பொருட்களை விற்று விட்டு அங்கிருந்தே அத்தியாவசியப் பொருட்களையும் கொள்வனவு செய்து எடுத்து வருகின்றனர்.


மேலும் எமது பிரதேச மாணவர்களுக்கான விநாசியோடையில் பாடசாலை ஒன்றும் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இப்பாடசாலையில் தரம் 11 வரை மட்டுமே கல்வி கற்க முடியும் உயர்தரத்தினை தொடர்வதற்ககாக பூநகரி பிரதேசத்திற்கு செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. தற்போது இப்பாடசாலையில் தரம் 13 வரையான கல்விசெயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமே.

இவ்வாறாக பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக கூறுகின்றார் புனிதமலர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

இவ்வாறான இப்பிரதேசம் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களுடன் காணப்பட்டாலும் அதனை தீர்ப்பதற்கு பல முயற்சிகளை எடுக்க முடியும் குறிப்பாக இப்பிரதேசத்தில் தற்போது இவ் மணல் மேடுகளையும் கோயில்களையும் பார்வையிடவென சுற்றுலாப்பயணிகளின் வருகை அமைந்திருக்கின்றது. இதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு கூட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களின் சுய தொழில் முன்னேற்றத்திற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அப்பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு தாயினது கண்களிலும் இப்பிரச்சினைகளை எடுத்துச் சொல்கையில் உள்ள தாகம், ஏக்கம் யாராலும் அளவிட முடியாததாக காணப்படுகின்றது.

இப்பகுதி மக்களது ஒவ்வொரு பிரச்சினைகளையும் கேட்டறிவதற்கு கூட நேரம் அற்றவர்களாகவே ஒவ்வொருவரும் கடந்து செல்கின்றோம். இவற்றிற்கான ஒரு விடிவு காலத்தை அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் நாட்களை கடத்துகிறார்கள் அப்பிரதேசமக்கள்.





யாழ். மாநகர சபை உறுப்பினரின் உயிரிழப்பு

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த கோரிக்கை

எம். றொசாந்த்

யாழில் கட்டாக்காலி நாய்கள், மாடுகளை மாநகர சபை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் து. இளங்கோ கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023ஆம் ஆண்டு பாதீடு சபையில் சமர்ப்பிப்பதற்கான விசேட அமர்வு, மேயர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் நடைபெற்றது. குறித்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, ஈ.பி.டி.பி உறுப்பினர் இளங்கோ மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

நாய்களை கட்டுப்படுத்துங்கள்; வீதிகளில் திரிகின்ற நாய்களை யாழ். மாநகர சபை கட்டுப்படுத்த வேண்டும். அத்தோடு மாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். யாழ். மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி மு. றெமீடியஸ், மோட்டார் சைக்கிளில் பயணித்த போது , வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து இருந்தார் என்றார்.

## கனடிய தூதுவர் யாழ். பல்கலைக்கு விஜயம்

எம். றொசாந்த்

இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான கனடிய தூதுவர் எரிக் வல்ஸ், நேற்று முன்தினம் (13) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கனடிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ், யாழ்பாண பல்கலைக்கழக கலைப் பீடத்தின், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையால் நடத்தப்படும் 'என்லீப்' செயற்றிட்டத்தின் மீளாய்வுக்காகவே, கனடியத் தூதுவர் தலைமையிலான குழு பல்கலைக்கழகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின் போது, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், மொழிபெயர்ப்பு கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.கே கண்ணதாஸ் ஆகியோருடனும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை மாணவர்களுடனும் கனடிய தூதுவர் கலந்துரையாடி, நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

திருமணமாகி இரண்டு மாதங்களான

## குடும்பஸ்தர் விபத்தில் உயிரிழப்பு

எம். றொசாந்த்

திருமணமாகி இரண்டே மாதங்களான இளம் குடும்பஸ்தர், விபத்தில் சிக்கி, வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சயந்தன் (வயது- 29) என்பவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபரும் அவரது சகோதரனும் ஜனவரி மாதம் 17ஆம் திகதி, மோட்டார் சைக்கிளில் கொடிகாமம் சென்றுவிட்டு, திரும்பி வரும் வேளையில் மட்டுவில், கனகம்புளியடி சந்தியில் சமிக்ஞை இன்றி வீதியில் திரும்பிய உழவு இயந்திரத்துடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானார்கள்.

விபத்தில் படுகாயமடைந்த சகோதரர்கள் இருவரும், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், குறித்த குடும்பஸ்தர் ஞாயிற்றுக்கிழமை (12)உயிரிழந்தார்.

## கனடாவில் இருந்து வந்தவர்களால் நிவாரணமும் நிதியுதவியும்

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு ஒருதொகுதி உலர் உணவு பொதிகளும் பெண்கள் அமைப்புக்கு நிதிஉதவியும், கனடா நாட்டில் இருந்து வந்தவர்களா ல் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த திழங்கட்கிழமை (13) முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பழம்பாசி 17 ஆம் கட்டை பகுதியில் வசிக்கும் பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டுள்ள 30 குடும்பங்களுக்கு, உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு



முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் க. சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

இதில், கனடா, மார்க்கம் நகரில் இருந்து வந்த இராஜேஸ்வரன் தம்பதியினர் நேரடியாக பயனாளர்களை பார்வையிட்டு கலந்துரையாடியதுடன் உலர் உணவு பொதிகளையும் வழங்கினார்கள்.

தொடர்ந்து, மாங்குளம் மாவீரர் குடியிருப்பில் உள்ள இசை மகளிர் சங்கத்துக்கு சங்கத்தின் வளர்ச்சிக்காக 50,000 ரூபாய் நிதி உதவியும் வழங்கினார்கள்.

புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வசித்துவரும் இவர்கள், தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக நேரடியாக கிராமங்களுக்கு சென்று பார்வையிட்டு, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, தொடர்ந்தும் மக்களுக்கான உதவிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட தொழிற்சந்தை

## முன்னோடி கலந்துரையாடல்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட தொழில் சந்தைக்கான முன்னோடி கலந்துரையாடல் நேற்று முன்தினம் (13) மாவட்ட செயலகத்தில், மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரனுக்கும் 'யூலிட்' (youlead) நிறுவன பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் எதிர்வரும் 23.03.2023ஆம் திகதி மாவட்ட மட்டத்தில் பாரிய தொழிற்சந்தை (mega career fair) நிகழ்வை மாவட்டச் செயலக வளாகத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான உள்நாட்டு,



வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான கற்கை நெறிகளுக்கான வழிகாட்டல்கள், தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான தொழிற்சந்தைக்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சமுர்த்தி குடும்பங்களில் இருந்து இளைஞர், யுவதிகளை தொழில் பயிற்சிக்கு உள்ளீர்ப்பதனூடாக, அவர்களுக்கு ஒரு சிறந்த தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில், மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந. திருலிங்கநாதன், யூலிட் பங்குதாரர் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கான பணிப்பாளர், யூலிட் நிறுவனத்தின் தொழில் வழிகாட்டலுக்கான இணைப்பாளர், யூலிட் வட கிழக்குக்கான இணைப்பாளர்கள், திறன்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர், மனிதவள மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

'நூறு கோடி மக்களின் எழுச்சி– 2023 பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற வாழ்வை கொண்டாடுவோம்' எனும் கருப்பொருளில், மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (14) மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை நிறுத்தி, உடல் உள ரீதியாக பெண்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கவனயீர்ப்புப் பேரணியும் இடம்பெற்றது. இதன்போது பறை இசை ஒலிக்கப்பட்டு பாடல்கள் இசைக்கப்பட்டன.

மன்னார் நிருபர்

## கவனயீர்ப்பு பேரணி





# நடன ஆசிரியர் நியமனம் பெற்றுத்தருவதாகக் கூறி பல இலட்சம் மோசடி

பாறுக் ஷிஹான்

நடன ஆசிரியர் நியமனம் பெற்றுத்தருவதாகக் கூறி, பல இலட்சம் ரூபாயை மோசடி செய்த குழு, கல்முனை தலைமையக பொலிஸார் விரித்த வலையில் சிக்கியுள்ளது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை (09), கல்முனையைச் சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் முறைப்பாடு அளித்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில், நடன ஆசிரியர் நியமனம் பெறுவதற்கு திங்கட்கிழமை (06) 840,000 இலட்சம் ரூபாயை வங்கி ஊடாக வைப்புச் செய்ததாகவும் தான் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சில் உள்ள பதவி நிலை உயரதிகாரியின் பெயரை பயன்படுத்தி, இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்களான முஜிசாத், விஜிதரன், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் செவ்வந்தி ஆகியோர் நான்கு சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைதானவர்களின் வாக்குமூலத்தின்படி, சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவிக்கின்ற நபரே தம்மை வழிநடத்தியதாகவும் தெரிவித்தனர்.

மேலும், கைதான சந்தேக நபர்களை ஞாயிற்றுக்கிழமை (12) கல்முனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை அடுத்து, வெள்ளிக்கிழமை (17) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த மோசடி, கல்வி அமைச்சின் உள்ள அதிகாரியின் பெயரை குறிப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் வழங்கியிருந்தார். இவ்வாறான மோசடிகள் போன்று ஏதேனும் முறைப்பாடுகள் உள்ளனவா? சிறையில் இருந்து வழிநடத்தும் நபர்கள் தொடர்பிலும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



வீட்டுக்குள் வைத்து

## யானை தாக்கி முதியவர் மரணம்

காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்த சம்பவம், தோப்பூரில் நேற்று (14) அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில், அல்லைநகர் 09 எனும் கிராமத்தைச் சேர்ந்த குப்பைத்தம்பி அப்துல்காதர் என்ற 83 வயதானவர் உயிரிழந்துள்ளார்.

குடியிருப்பு காணியில் நுழைந்த காட்டு யானை, வீட்டில் இருந்த தென்னைமரத்தை சாய்த்து சேதம் செய்தபோது, சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே வந்தவர் சீனவெடி வெடித்து யானையைத் துரத்த முயன்றபோது, கோபமடைந்த யானை, அவரை துரத்தியது. அவர் வீட்டுக்குள் ஓடியபோது, அவரை வீட்டுக்குள் வைத்து யானை தாக்கி, பரிதாபகரமாகக் கொன்றது. அவரது மனைவியும் அதே வீட்டில் வசித்து வந்தார். மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.





## கலைவிழா

கிரான் இந்து சமய வளர்ச்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஆங்கில முன்பள்ளியின் 2022ஆம் ஆண்டுக்கான கலை விழாவும் பிரிவுபசார வைபவமும் கிரான் றெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பள்ளியின் அதிபர் திருமதி ரவிக்குமார் வசுமதியின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், கிரான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சோ. யோகராசா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக சிவஸ்ரீ சண்முகம் குருக்களும் சிறப்பு அதிதிகளாக ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்களான எஸ். சிவவரதன், எஸ். விஜயகுமார் ஆகியோரும் விசேட அதிதிகளாக கிரான் விவேகானந்த வித்தியாலய அதிபர் திருமதி சுமித்திரா விஜியானந்தம், புதுக்கொலணி சிவ வித்தியாலய அதிபர் ரி. தமிழ்வாணன், பறங்கியாமடு பாரதி வித்தியாலய அதிபர் திருமதி தெய்வமணி சிவானந்தன், கலாசார உத்தியோகத்தர் ப. சிவராம் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆர். ஜெயஸ்ரீராம்




லீடர் அஸ்ரப் வித்தியாலயம்

## வரலாற்றுச் சாதனை

எம்.என்.எம் அப்ராஸ்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் ஏ.ஜீ.எம் அஹ்னப், சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் 178 புள்ளிகள் பெற்று, கோட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்று பாடசாலைக்கு வரலாற்றுச் சாதனை படைத்தாக, பாடசாலை அதிபர் எம்.ஐ சம்சுதீன் தெரிவித்தார்.

அத்துடன், கல்முனைக் கல்வி வலய மட்டத்தில் குறித்த மாணவன் இரண்டாமிடம் பெற்றுள்ளதுடன், இப்பாடசாலையில் இம்முறை மேற்படி பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

கல்முனை முஸ்லிம் பிரிவின்

## கோட்டக்கல்வி அதிகாரியாக நியமனம்

மாளிகைக்காடு நிருபர்



கல்முனை கல்வி வலய, கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் இஸ்லாம் பாட உதவி கல்வி பணிப்பாளர் ஏ.பி நஸ்மியா சனூஸ், நேற்று முன்தினம் (13) கல்முனை முஸ்லிம் கோட்டக்கல்வி பணிமனையில் தமது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார். இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான நஸ்மியா சனூஸ், அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்தக் கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



## ஆய்வு நூல் வெளியீட்டு விழா

வி. சுகிர்தகுமார்

ஆய்வார்வலரும், தொல்லியலாளருமான 'கலாபூஷணம்' நா. நவநாயகமூர்த்தி எழுதிய 'பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்' எனும் ஆய்வு நூல் வெளியீட்டு விழா, ஞாயிற்றுக்கிழமை (12) ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஜீவாதார சித்தவித்தியா அறக்கட்டளையின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன், அதன் தலைவர் ஓய்வு நிலை அதிபர் க. இரத்தினவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இமயமலை ரிசிகேசு சுவாமிகள் நித்தியானந்த சரஸ்வதி மகராஜ் அருளாளராக கலந்து கொண்டதுடன் பிரதம அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா. செல்வராஜா, அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளில் சிறப்பு அதிதிகளாக தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரன், தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி பீடாதிபதி த. கணேசரெத்தினம், அக்கரைப்பற்று வலய உதவி கல்வி பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல் தௌபீக், பிரபல வர்த்தகர் நன்கொடையாளர் எஸ். பரநாதன், ஜீவாதார சித்தவித்தியா அறக்கட்டளை ஸ்தாபகர் செல்லத்துரை விக்னேஸ்வரமூர்த்தி உள்ளிட்ட கல்வியலாளர்கள், இலக்கியவாதிகள் கலந்து கொண்டனர்.

# 3ஆவது பிரசவத்தின் பின் தாய் மரணம்

■ சுமணசிறி குணதிலக

மூன்றாவது குழந்தையைப் பிரசவிப்பதற்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வந்த தாய், பிரசவத்தின் பின்னர் உயிரிழந்துள்ளதாக தம்பகல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தம்பகல்ல, மரியராவ கங்கோதரகம பகுதியைச் சேர்ந்த 40 வயதான தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாதம் 11ஆம் திகதி, மூன்றாவது பிரசவத்திற்காக தம்பகல்ல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மொனராகலை வைத்தியசாலையில் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த இவர், அதிக இரத்தப்போக்கு காரணமாக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சிசுவின் உடல் நிலையும் மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# படத்துடன் பிரசாரம் செய்யும் உரிமை எமக்கு மட்டுமே உண்டு

## இராதா எம்.பி தெரிவிப்பு

■ நிலமேகம் பிரசாந்த்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் சந்திரசேகரனின் படத்தை வைத்து, பிரதேச சபை தேர்தலில் பிரசாரம் செய்வதற்கு மலையக மக்கள் முன்னணிக்கு மாத்திரமே உரிமையுள்ளது எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன், மலையக மக்கள் முன்னணியிலிருந்து விலக்கப்பட்டவர்களோ அல்லது கட்சிக்கு தொடர்பில்லாதவர்களோ எவரும் பயன்படுத்த முடியாதென தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபை தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், பல பகுதிகளில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் கை சின்னத்தில் போட்டியிடும் நுவரெலியா வேட்பாளர்கள் மற்றும் கார் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் அமரர் சந்திரசேகரனின் உருவபடம் பொறிக்கப்பட்ட பதாகைகளை முகநூலிலும் ஏனைய பொது இடங்களிலும் காட்சிப்படுத்தி பிரசாரம் செய்து வருகின்றனர்.



அமரர் சந்திரசேகரன் உருவபடத்தை பயன்படுத்தி வாக்கு சேகரிக்க மலையக மக்கள் முன்னணி இணைந்துள்ள தமிழ் முற்போற்கு கூட்டணி வேட்பாளர்களுக்கும் அதேபோல அங்குராங்கெத்த தொகுதியில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு. மலையக மக்கள் முன்னணியிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கோ விலகியவர்களுக்கோ உரிமை கிடையாது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளோம். எனவே இது தொடர்பில் விரைவில் இவ்வாறு பிரசாரம் செய்பவர்களுக்கு எதிராக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் என்ற ரீதியில் சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிட்டார்.



# சிறுத்தை இறைச்சி விற்ற நால்வர் சிக்கினர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தேயிலைத் தோட்டமொன்றில் நடமாடிய சிறுத்தையைக் கொன்று, அதன் இறைச்சியை விற்பனை செய்த நால்வர் பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுத்தையை பொறியில் சிக்க வைத்து, சந்தேகநபர்கள் கொன்று, இறைச்சியை விற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (13) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொட்டியாக்கல தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார், சிறுத்தையின் சில உடற்பாகங்களையும் சந்தேகநபர்களிடமிருந்து மீட்டு நல்லத்தண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வாகனம் வரும் முன் பால் குடிக்கும் நாய்கள்

■ செ.தி. பெருமாள்

மஸ்கெலியாவிலுள்ள சாமிமலை, டீசைட் பகுதியில் பசுப்பால் உற்பத்தியாளர்கள் அன்றாடம் சேகரிக்கும் பாலை, பால் சேகரிப்பு வாகனங்களுக்கு விநியோகிப்பதற்காக டீசைட் சந்தியில் வைத்திருக்கும் போது, கட்டாக்காலி நாய்கள் அவற்றை பருகிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உற்பத்தியாளர்கள் பாதுகாப்பான முறைகளில் கேன்களில் ஊற்றி மூடி வைத்திருந்தாலும் கட்டாக்காலி நாய்கள் அந்த கேன்களில் உள்ள மூடியை தட்டி விட்டு பாலை அருந்திச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் உற்பத்தியாளர்கள் பாதிப்பதுடன், பாலும் அசுத்தமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

# காதலியைப் பார்க்க பஸ்ஸை ஓட்டிய நடத்துநர் சிக்கினார்

■ ஷேன் செனவிரத்ன

ரம்புக்கனை டிப்போவுக்கு உரிய பஸ் ஒன்றை, ஹதரலியத்த பஸ் நிலையத்தில் இரவு நேரத்தில் நிறுத்தி விட்டு, சாரதி வீட்டுக்குச் சென்ற நிலையில், பஸ்ஸின் நடத்துநர் தனது காதலியைப் பார்க்க அந்த பஸ்ஸை எடுத்துச் சென்ற போது, அந்த பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதையடுத்து பஸ்ஸை எடுத்துச் சென்ற நடத்துநர், ஹதரலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மறுநாள் அதிகாலை 5.30 மணியளவில் மீண்டும் ரம்புக்கனைக்கான பயணத்தை ஆரம்பிப்பதற்காக குறித்த பஸ் சாரதியால் ஹதரலியத்த பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டதுடன், நடத்துனரும் பஸ்ஸிலேயே தூங்கியுள்ளார்.

**அதிகாலை 5.30 மணிக்கு, மீண்டும் ரம்புக்கனைக்கு பயணிக்க, ஹதரலியத்த தரிப்பிடத்தில் பஸ் நிறுத்தப்பட்டது. சாரதி சென்றதும் நடத்துநர் பஸ்ஸை எடுத்துக்கொண்டு, எட்டு கிலோ மீற்றர் தொலைவில் இடத்துக்குச் சென்று காதலியைப் பார்த்து விட்டு திரும்பும்போது பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது**

சாரதி அங்கிருந்து சென்றதும் நடத்துநர் பஸ்ஸை எடுத்துக்கொண்டு, சுமார் எட்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கெபெல்லாவத்த என்ற இடத்துக்குச் சென்று தனது காதலியைப் பார்த்து விட்டு திரும்பிய போது பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து நடத்துநரை கைதுசெய்து விசாரணை செய்த போது, அவர் தனது தவறை ஒத்துக்கொண்டு உள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மஹியங்கனையில் ஆணின் சடலம் மீட்பு

■ ராமு தனராஜா

மஹியங்கனை, பதியதலாவ வீதியில் தெய்கொல்ல பாடசாலைக்கு அருகாமையில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அருகில் மூடப்பட்டுள்ள கடைக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பலகை தட்டுக்கு அடியில் இருந்து நேற்று முன்தினம் (13) மாலை 3 மணியளவில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இறந்தமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் அவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை என்றும் மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கோழிச் சண்டையில் விந்தகத்துக்கு காயம்

■ பாலித ஆரியவன்ஸ

மடுல்சீம, பிட்டமாருவ கிராமத்தில் இரு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி, ஒருவரின் விந்தகத்தை வெட்டும் அளவுக்குச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (13) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், வாய்த்தர்க்கம் நீண்டு, ஒருவர் மற்றையவரின் விந்தகத்தை வெட்டும் முயற்சிக்கு சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

காயமடைந்த நபருக்கு மற்றைய நபர் இரண்டு கோழிகளை வளர்ப்பதற்கு கொடுத்துள்ளதுடன் அதில் ஒரு கோழி காணாமல் போனமையால் இப்பிரச்சினை ஏற்பட்டதாக காயமடைந்தவர் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த 41 வயதானவர் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகளை மடுல்சீம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**வாய்த்தர்க்கம் நீண்டு, ஒருவர் மற்றையவரின் விந்தகத்தை வெட்ட முயன்றுள்ளார். காயமடைந்த நபருக்கு மற்றைய நபர் இரண்டு கோழிகளை கொடுத்துள்ளதுடன் அதில் ஒரு கோழி காணாமல் போனமையால் இப்பிரச்சினை ஏற்பட்டது. காயமடைந்த 41 வயதானவர் பசறை வைத்தியசாலையிலும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளார்**

# வர்ணப் பூச்சு வழங்கி வைப்பு



இலங்கை தேசிய முற்போக்கு விவசாயிகள் முன்னணியின் பொதுச்செயலாளர் வேலு ஜீவராஜாவின் நிதி அனுசரணையில், தலவாக்கலை கூம்மூட் தோட்ட சிறுவர் பாடசாலைக்கு வர்ணப்பூச்சு வழங்கி வைக்கப்பட்டது.

(பி. கேதீஸ்)

### வெளிநாட்டு ஆசையூட்டி பணமோசடி

# அதிபர் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல்

■ ராமு தனராஜா

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி, இளைஞர்களை ஏமாற்றி பணமோசடியில் ஈடுபட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பதுளை, மடூல்சீமை, பசறை, லுணுகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் பதுளை, பசறை, லுணுகலை ஆகிய பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பதுளை பொலிஸாரால் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதற்கமைய, இருவிருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபரான லுணுகலை பகுதியை சேர்ந்த அதிபர், நேற்று முன்தினம் லுணுகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அதிபரை 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# வலம்புரி சங்கை விற்க முயன்ற இருவருக்கு விளக்கமறியலில்


■ சுதத்.எச்.எம்.ஹேவா

வலம்புரி சங்கு ஒன்றை 6 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ய முயன்ற போது, கைதுசெய்யப்பட்ட நபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் மாவட்ட நீதவான் மொஹமட் பரீடீன் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய இந்த மாதம் 21ஆம் திகதிவரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வலம்புரி சங்கொன்று 6 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ளதென இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் விசேட படையினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு, ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் சந்தேகநபர்கள் ஹட்டன் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ஹட்டனைச் சேர்ந்த 36 வயதானவரும் உடபுஸ்ஸலாவையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



**வலம்புரி சங்கு 6 கோடிக்கு விற்பனையாக உள்ளதென கிடைத்த தகவலுக்கமைய பொலிஸ் விசேட படையால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்**

### ஓர் அமைச்சை வைத்துக்கொண்டு

# “அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாது”

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நாட்டின் பல ஜனாதிபதிகளை உருவாக்கிய ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்ய முடியாமல் இருக்கும் போது, ஒரேயோர் அமைச்சுப் பதவியை வைத்துக்கொண்டு மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளை முடிக்க முடியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா, கவரவில, மானெலி ஆகிய தோட்டங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக நேற்று (14) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில், அரச சொத்துகளை விற்று நாட்டுக்கு டொலரை வழங்கும் நோக்கத்துடன் யாராவது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்து, சகல தேயிலைத் தோட்டங்களையும் தனக்கு வழங்குமாறும் அதனூடாக அதிக முதலீடு செய்யலாம் எனக் கோரினால் நாட்டின் ஆட்சியாளர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெருந்தோட்ட மக்களுக்காக குரல் கொடுக்க எமது கட்சி, அரசியல் ரீதியாக வலுப்பெற வேண்டும். அதற்காக பெருந்தோட்ட மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.



# மக்களுக்கான நிவாரணங்களை துரிதப்படுத்த வேண்டும்

நாட்டையும் நாட்டு மக்களையும் பொருளாதார நெருக்கடி வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்றது. அடுத்த வேளைக்கு என்ன செய்வோம் எனத் தெரியாது, ஒவ்வொரு குடிமகனும் திணறிக்கொண்டிருக்கின்றான். வேலை இன்மை, உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மை, மேலதிக வேலைநேரமும் அதற்கான கொடுப்பனவும் பல நிறுவனங்களில் வழங்கப்படுவதில்லை; இன்றேல் குறைக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் வருமானத்தில் ஜீவியத்தை நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் போஷாக்கின்மையின் சதவீதம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. பொருட்களுக்கான தட்டுப்பாடு குறைவாக இருந்தாலும்,கொள்வனவு செய்யும் அளவுக்கு மக்களிடம் போதியளவு நிதி வசதியில்லை என்பதே உண்மையாகும்.

இருப்பதை வைத்து காலத்தை பலரும் கடத்திக்கொண்டிருக்கின்றனர். இல்லாதவர்கள் உணவு வேளைகளை சுருக்கிக்கொண்டு வாழப் பழகிவிட்டனர். அந்தளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டே செல்கின்றது. இந்நிலையில்தான், பொருளாதார நிலைமையில் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யோசனையை முன்வைத்துள்ளார்.

அதுமட்டுமன்றி அத்தியாவசிய மருந்து வகைகளை கொள்வனவு செய்வது குறித்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இந்த யோசனைகள் யாவும் கிடப்பில் போட்டுவிடாது, துரிதமாக செயற்படுத்தவேண்டும். இல்லையேல் மக்களின் நிலைமை இன்னும் மோசமாகும் என்பது மட்டுமே உண்மையாகும்.

பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, கொலை, கொள்ளை, களவு, சூறையாடுதல் ஆகியன அதிகரித்துவிட்டன. இருக்கும் ஒருசில பொருட்களை காப்பாற்றிக்கொள்வதற்கு கூட, பெரிதும் சிரமப்படவேண்டிய நிலைமையில் மக்கள் இருக்கின்றனர்.

ஜனாதிபதியின் யோசனையின் பிரகாரம், நெல் கொள்முதல் செய்வதற்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது. குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் அரசியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச பணிகளில் இருந்து ஓய்வு பெற்ற 18ஆயிரம் பேருக்கு ஓய்வூதியப் பணிக்கொடை நிலுவைத் தொகையை வழங்குவதற்கான யோசனையும் அடங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் சகல துறைகளைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்தியதர வர்க்கத்துக்கு கீழுள்ள பிரிவினர் கடுமையாகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் தொடர்பிலும், விவசாயிகள், மரக்கறி உற்பத்தியாளர்கள் குறித்தும் அரசாங்கம் அதி சிரத்தையை காண்பிக்கவேண்டும். அவர்களை ஓரளவுக்கு ஊக்கப்படுத்துவதன் ஊடாக, இன்னும் சில நாள்களுக்கு தாக்குப்பிடிக்க முடியும் என்பதே எமது அவதானிப்பாகும்.

மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக, நிதியை உடனடியாக விடுவிக்குமாறு நிதியமைச்சுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளார். இவ்வாறான நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நிவாரணைகளை வழங்குவதற்கான பொறிமுறையை உடனடியாக ஏற்படுத்தவேண்டும்.

தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற யூகமும் உள்ளதால், நிவாரணங்களை சிலர் பதுக்கிவைத்து தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்த கூடும். அவற்றுக்கெல்லாம் இடமளிக்காது, பாதிக்கப்பட்ட மக்களின் கைகளுக்கு நேரடியாக சென்றடையும் வகையிலான பொறிமுறையே அவசியம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

வெற்றிகளைப் பெற்றிட விரும்புபவர்கள், தோல்விகளை ஏற்கவும் தயாராக வேண்டும். நாட்டுக்காப் போராடும் வீரன், வெற்றி - தோல்விகளை எண்ணி, தன்னிலை மாறமாட்டான்.

தோற்கும் போராட்டங்கள், பல அனுபவங்களைத் தருகின்றன. வாழ்க்கையில் எமக்கு வரும் பிரச்சினைகளைப் பற்றி, அதிகமாக மனக்கிலேசம் அடையத்தேவையில்லை. செய்யும் செயல்களைத்தவிர, வேறு எதையும் நெஞ்சத்தில் உட்செலுத்தலாகாது.

வாழ்க்கையில் சுமுகமாகவும் நிம்மதியாகவும் வாழ, எடுத்த காரியத்தை கைவிடாமல் இருப்பதே புத்திசாலித்தனமானது. நல்லது எதையும் அரைகுறையாகச் செய்வதில் அர்த்தமில்லை. கல்வியை அரைகுறையாகக் கற்றால் சித்தியடைய முடியுமா?

வெற்றியைத் தேடுபவன் பிறவிடயங்களைக் கண்டுகொள்ள மாட்டான். நேரிய எண்ணங்கள் தடம்புரள்வதேயில்லை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘சுயாதீன’ ஆணைக்குழுக்கள் சுயாதீனமானவையா?



எம்.எஸ்.எம் ஐயூப்

தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதன் பிரகாரம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறுமா என்ற சந்தேகம், நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. தொடர்ச்சியாக, அரசாங்கம் ஏற்படுத்தி வரும் முட்டுக்கட்டைகளே அதற்குக் காரணமாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவர, அரசாங்கம் ஆரம்பத்தில் முயன்றது. அவை பயனளிக்காது என்று நினைத்தோ என்னவோ, அதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளைக் குழப்பும் தந்திரங்களில் ஈடுபட்டது; ஈடுபட்டும் வருகிறது. அந்தத் தந்திரங்களில், ஜனநாயக விரோதமான மறைமுக வன்முறைகளும் அடங்குகின்றன.

அத்தோடு முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர், தேர்தல் நடத்துவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு, தேர்தல் நடத்துவதைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில், 1,000 கோடி ரூபாய் செலவழித்து, இந்தத் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற அடிப்படையிலேயே அந்த இராணுவ அதிகாரி, வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

தற்போதைய நிலையில், தேர்தலுக்கு பணம் வழங்குவது சவாலாக இருக்கிறது என்று திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நீதிமன்றத்துக்கு சத்தியக் கடுதாசி மூலம் அறிவித்துள்ளார்.

அவர் தேர்தலுக்கு பணம் வழங்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கவில்லை. தற்போதைய நிலையில், அது மிகவும் சவாலான விடயம் என்றே கூறியிருக்கிறார். எனவே, உயர்நீதிமன்றம் இது தொடர்பாக என்ன முடிவு எடுக்கும் என்பதை முன்கூட்டியே கூற முடியாதிருக்கிறது. தற்போதைய நிலையில், நீதிமன்றத்தின் தீர்ப்பே, தேர்தல் நடத்துவதை இறுதியில் தீர்மானிக்கும் என்றுதான் தெரிகிறது.

அரசாங்கம், பல முக்கிய தேவைகளுக்காக பணம் இல்லாது தடுமாறுகிறது. மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் மருத்துவ உபகரணங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக செய்திகள் கூறுகின்றன.

விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் பணம் இல்லை என்று கூறப்படுகிறது. இது போன்றதொரு நிலையில் தேர்தலொன்று, அதுவும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தாத, மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தாத ஒரு தேர்தலுக்கு 1,000 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டுமா என்ற கேள்வியை பலர், குறிப்பாக ஆளும் கட்சியினர் எழுப்புகின்றனர்.

தற்போது நாட்டில், தமக்குச் சாதகமான நிலைமை இல்லை என்பதற்காகவே ஆளும் கட்சியினர் இந்த வாதத்தை முன்வைக்கின்றனர். ஆனால், நியாயமான அடிப்படையிலும் பலர் இந்த வாதத்தை முன்வைக்கின்றனர். இது இரண்டு புறத்துக்கும் வாதிடக்கூடிய ஒரு விடயமாக உள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலால், உடனடியாக ஆட்சி மாற்றம் ஏற்படப் போவதில்லை என்பது உண்மையே. ஆயினும், இந்தத் தேர்தல் ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளமிடலாம். 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கு, 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலே அடித்தளமிட்டது. எனவே, இந்தத் தேர்தல் வேண்டுமா இல்லையா என்பது ஆட்சி மாற்றம் வேண்டுமா இல்லையா என்ற கேள்விக்கு சமமாகும். ஆனால், அந்த மாற்றத்துக்கு வித்திடக்கூடிய இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பற்றிய இறுதித் தீர்வு நீதிமன்றித்திடமே இருக்கிறது.

நீதிமன்றம் எந்த முடிவை எடுத்தாலும், தேர்தலை நிறுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள், தேர்தல் ஆணைக்குழு எந்தளவு சுயாதீனமானது என்ற கேள்வியை எழுப்புகிறது. அண்மைக் காலத்தில் இந்தக் கேள்வி, ஏனைய சில ஆணைக்குழுக்கள் விடயத்திலும் எழுந்தது. குறிப்பாக, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றின் விடயத்திலும் இந்தச் சந்தேகம் எழுந்தது.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களைத் தமது அலுவலகத்துக்கு அழைத்து கலந்துரையாடினார். அப்போது அவர், தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதைப் பற்றிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்து வேறுபாடுகளை தீர்த்துக் கொள்ளுமாறு கூறியிருந்தார்.

ஆனால், அவ்வாறான கருத்து வேறுபாடுகள் இல்லை என ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் ஜீ புஞ்சிஹேவா பின்னர் தெரிவித்திருந்தார். இது, அந்த உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருப்பதாகக் கூறி, தேர்தலை ஒத்திவைக்க எடுக்கப்பட்ட முயற்சியாக கருதப்படுகிறது.

க.பொ.த உயர் தர பரீட்சை நடைபெறும் காலத்தில், தேர்தலை நடத்துவதைப் பற்றி பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடினீர்களா என்றும் அவர் அதே கூட்டத்தில் புஞ்சிஹேவாவிடம் கேட்டிருந்தார். இதுவும் தடையை ஏற்படுத்த எடுத்த, மற்றொரு முயற்சியாகும்.

தேர்தலொன்று அறிவிக்கப்பட்டு இருக்கும் காலத்தில், கட்சி ஒன்றின் தலைவரான ஜனாதிபதி, ஒரு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை இவ்வாறு அழைக்கலாமா என்ற கேள்வியை, அப்போது தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் எழுப்பியிருந்தன.

அதையடுத்து ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அதைப் பற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை.

அத்தோடு, ஆணைக்குழுவின் மற்றோர் உறுப்பினரான பி.எஸ்.எம் சார்ள்ஸ் ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

அதையடுத்து தேர்தல் ஆணைக்குழு பணப் பிரச்சினையை எதிர்நோக்கியது. இந்நிலையில், ஏனைய நிறுவனங்களிடம் கடன் பெறக்கூடாது என்று ஜனாதிபதி, அரச நிறுவனங்களுக்கு கட்டளை பிறப்பித்தார். இப்போது பணம் இல்லாமல் வாக்குச்சீட்டுகள் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான எதையும் அச்சிட முடியாது என அரச அச்சகம், தேர்தல் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

கடந்த வரவு - செலவு திட்டத்தில், ஆணைக்குழுவுக்கு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தும், ஆணைக்குழு நிதி நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கிறது. எனவே, தேர்தல் ஆணைக்குழு தமது சுயாதீனத்தன்மையை இழந்துள்ளது.

இதுபோன்றதொரு நிலையை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் எதிர்நோக்கி இருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கக் கூடாது என்று அவ்வாணைக்குழுவின் தவிசாளர் ஜனக்க ரத்னாயக்க வலியுறுத்தி வருகிறார்.

ஆனால், அரசாங்கம் அதை ஏற்கவில்லை. ஜனாதிபதியே இக்காரணத்துக்காக ரத்னாயக்கவை தனிப்பட்ட முறையில் சாடியிருந்தார். உலக சந்தையில் எரிபொருள் விலை புதிதாக அதிகரிக்கப்படாத நிலையில், தமது பழைய நட்டங்களுக்காக மின்சார சபை மின்கட்டணத்தை அதிகரிப்பது முறையாகாது என்பதே ரத்னாயக்கவின் வாதமாகும்.

க.பொ.த உயர் தர பரீட்சை நடைபெறும் காலத்தில், மின்வெட்டை தவிர்க்க வேண்டும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, மின்சார சபைக்கு பணிப்புரை விடுத்தது. ஆனால், மின்சார சபை அதைப் புறக்கணித்தது. அதையடுத்து, பரீட்சை காலத்தில் இடம்பெறும் மின்வெட்டை எதிர்த்து ஆணைக்குழு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, மின்சார சபையால் புறக்கணிக்க முடியுமாக இருந்தால், அவ்வாணைக்குழு சுயாதீன ஆணைக்குழுவாக இருக்க முடியாது.

இந்த மின்வெட்டுப் பிரச்சினையைப் பற்றி கலந்துரையாட, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மின்சார சபை, எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியது.

மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தேவையான எரிபொருளை கடனுக்குப் பெற்று, பரீட்சைக் காலத்தில் மின்சாரத்தை தடையின்றி வழங்குவதென்றும் எதிர்க்காலத்தில் மேற்கொள்ளப்படும் மின் விலை ஏற்றத்தால், அந்தக் கடனை அடைப்பதென்றும் அந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், அந்த இணக்கத்ததை மின்சார சபை புறக்கணித்தது. பரீட்சைக் காலத்திலும் மின்வெட்டை தொடர்ந்தது. எனவே, மின்வெட்டானது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக்க ரத்னாயக்கவுக்கும் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுக்கும் இடையிலான‘ ‘ஈகோ’ சண்டையைப்போல்த் தான் தெரிகிறது.

இந்த மின்வெட்டின் காரணமாக, மனித உரிமைகள் ஆணைக்குழு அவமதிக்கப்பட்டுள்ளதாக அவ்வாணைக்குழு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. ஆனால், உயர்நீதிமன்றம் அதனை நிராகரித்தது. சட்டப்படி அத்தீர்ப்பு சரியானதாக இருக்கலாம். ஆனால், அங்கும் மின்சார சபை ஓர் ஆணைக்குழுவுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டை புறக்கணித்துள்ளது என்பது உண்மையாகும்.

2019ஆம் ஆண்டு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி ஏற்கும் போதும் சுயாதீன ஆணைக்குழுக்கள் இருந்தன. ஆயினும், கோட்டாபய பதவி ஏற்றவுடன் பொலிஸ் ஆணைக்குழு, இரகசிய பொலிஸின் பணிப்பாளராக இருந்த, ராஜபக்ஷர்கள் விரும்பாத ஷானி அபேசேகரவை, தென் மாகாணத்தில் உயர்பொலிஸ் அதிகாரியின் கீழ் பதவியொன்றுக்கு இடமாற்றம் செய்தது.

அதையடுத்து அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பசில் ராஜபக்ஷ, கடந்த நவம்பர் மாதம் நாடு திரும்பிய போது, பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் சந்திரா பெர்னாண்டோவும் மற்றோர் உறுப்பினரான எம்.பி பெரேராவும் அவரை வரவேற்க கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றதாக, எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. இவை அனைத்தும் சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனமானவையா என்ற கேள்வியை எழுப்புகின்றன.

## கடிதங்கள்

### மடுக்கரை கிராம மக்களின் அவலநிலை

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து தேவைகளுக்கு, பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததால் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், வடக்கு மாகாண ஆளுநர் தமது கிராமத்துக்கு நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு, உள்ளக வீதியையும் பாலத்தையும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மடுக்கரை முள்ளிமோட்டை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில், 2018ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட 90 குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியில், 18 குடும்பங்கள் ஆற்றைக் கடந்து குடியேற்றப்பட்டுள்ளன.

வீடுகளுக்கு அருகிலேயே அருவி ஆற்றின் கிளை ஆறு ஓடிக் கொண்டிருப்பதால், தற்காலிக பாலம் கூட அமைத்துக் கொடுக்கப்படாமல் ஆற்றில் இறங்கியே, ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

கோடை காலத்தில், நீர் ஓரளவு வற்றிக் காணப்பட்டாலும், மழைக் காலங்களில் ஆற்றில் நீர் நிறைந்து ஓடுவதால், அன்றாட கடமைகளை செய்ய முடியாமல் அப்பகுதி மக்கள் திண்டாடி வருகிறார்கள்.

அப்பகுதியில் வசிக்கும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று அனைவரும், அன்றாடப் போக்குவரத்துக்கும் பாடசாலை செல்வதற்கும் அவசர மருத்துவ தேவைகளைப் பெறுவதற்கும் இயலாமல் தவித்து வருகிறார்கள்.

எனவே, வடக்கு மாகாண ஆளுநர், எமது கிராமத்து மக்கள் மீது அக்கறை கொண்டு, தற்காலிகமாக பாலம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எஸ். றொசேரியன் லெம்பேட்



துருக்கி

# துருக்கியில் மருத்துவமனையை அமைத்த இந்திய இராணுவம்




துருக்கி- சிரியா எல்லையில் கடந்த 6 ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

இதில் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 50,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனையடுத்து நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்திய மீட்புக்குழுவினர் அண்மையில் துருக்கி சென்றிருந்தனர்.

அதேசமயம் துருக்கியின் ஹடாய் பகுதியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இந்திய இராணுவம் கள மருத்துவமனை ஒன்றையும் அமைத்துள்ளது.

சுமார் 6 மணி நேரத்திற்குள்ளாக அமைக்கப்பட்ட இந்த 60 பாரா ஃபீல்ட் மருத்துவமனை, காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க 24 நேரமும் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக 96 பேர் இந்திய இராணுவத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இம்மருத்துவமனையில் இதுவரை 800க்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் 10 பேருக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கோட்டயம்

# பற்றியெரிந்த மருத்துவக் கல்லூரி

கேரள மாநிலம், கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டடமொன்றில் நேற்றைய தினம் எதிர்பாராத விதமாக தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

திடீரென கொழுந்து விட்டு எரிந்த இத்தீயால் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடும் கரும்புகை மூட்டம் ஏற்பட்டது.

முதல் மாடியின் ஒரு பகுதியில் திடீரென எரிந்த தீயை மருத்துவமனை ஊழியர்கள் கட்டுப்படுத்த முயற்சித்த போதே கட்டுக்கடங்காமல் தீ மற்ற மாடிகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகின்றது.

இதனால், அருகிலுள்ள கட்டடங்களில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் உடனடியாக வேறு கட்டடங்களுக்கு மாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல்பட்டு

# மணமேடையில் மயங்கி விழுந்த மணமகன்

### மணமகள் எடுத்த அதிரடி முடிவு

திருமண வரவேற்பின் போது மணமகன் 3 முறை மயங்கி விழுந்ததால் ஆத்திரத்தில் மணமகள் எடுத்த முடிவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல்பட்டு பகுதியைச் சேர்ந்த சுர்ஜித் என்பவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த யுவதிக்கும் கடந்த 13 ஆம் திகதி திருமணம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், கடந்த 12 ஆம் திகதி இரவு மணமகன் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இதன்போது குறித்த நிகழ்வில் மணமகன், மதுபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்டிருந்ததாகவும், மணமகளைப்பார்ந்து 3 முறை மயங்கி விழுந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் குறித்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த நிலையில், தான் அவமானப்பட்டதாக உணர்ந்த மணப்பெண், தனது பெற்றோரை அழைத்து மணமகனின் தள்ளாட்டம் குறித்து வேதனை தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பெண் வீட்டார் வரவேற்பு நிகழ்ச்சியை பாதியிலேயே நிறுத்தினர். மாப்பிள்ளையின் நடவடிக்கைகள் குறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கைகலப்பு உருவாகும் சூழ்நிலை உருவானதால் பொலிஸாருக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மணமகன் சுர்ஜித், "நான் செய்தது தவறு என்னை மன்னித்து விடுங்கள்" எனக் கைகூப்பி அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

எனினும் திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே ரகளையில் ஈடுபடும் இந்த இளைஞருடன் எங்கள் வீட்டுப் பெண்ணை கட்டிக் கொடுக்க முடியாது என்று பெண் வீட்டார் திட்டவட்டமாக மறுத்ததோடு, திருமணத்திற்கான மொத்த செலவையும் அவர் தான் ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாப்பிள்ளைக்கு அணிவித்த தங்கச் சங்கிலி, தங்க மோதிரம், தங்க கைகடிகாரம் உள்ளிட்டவைகளையும் பெண்வீட்டார் திரும்பப் பெற்றுள்ளதுடன் குறித்த திருமணத்தையே நிறுத்துவதாகவும் அறிவித்துள்ளனர்.



டெல்லி

# சிறுவனின் உயிரை பறித்த 'லி:ப்ட்'



புதுடெல்லியில் லிஃப்ட்டில் சிக்கி 15 வயதான சிறுவனொருவன் உடல் நசுங்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பவானா பகுதியில் உள்ள ஏர் கூலர் தொழிற்சாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த தொழிற்சாலையின் இரண்டாவது மாடியில் லிஃப்ட் அருகே அச்சிறுவன் பணிபுரிந்து கொண்டிருந்ததாகவும், இதன்போது எதிர்பாராதவிதமாக லிஃப்ட்டின் மேற்புறத்தில் சிக்கிக்கொண்டதாகவும், அப்போது தரை தளத்தில் இருந்து லிஃப்ட் மேலே வந்ததால் சிறுவன் உடல் நசுங்கி உயிரிழந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த லிஃப்ட் பெரும்பாலும் கனரக பொருட்களை எடுத்துச் செல்லவே பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை

# காதலிக்க மறுத்ததால் சிறுமியின் வீட்டின் மீது குண்டு வீச்சு



மதுரை, அனுப்பானடி பகுதியைச் சேர்ந்த மணிரத்னம் என்ற இளைஞர் அதே பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவரை தன்னைக் காதலிக்குமாறு நீண்ட காலமாக வற்புறுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து அச்சிறுமி தனது தந்தையிடம் கூறியதால் இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இதுதொடர்பான புகாரின் பேரில் மணிரத்னம் கைதாகி பிணையில் வெளியில் வந்துள்ளார்.

அதன் பின்னரும் அச்சிறுமியிடம் மணிரத்னம் தன்னைக் காதலிக்குமாறு தொந்தரவு செய்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் மாணவி தொடர்ந்து மறுத்து வந்ததால் ஆத்திரமடைந்த மணிரத்னம், தனது நண்பருடன் சேர்ந்து சிறுமியின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பெட்ரோல் குண்டு பட்டதில் வீட்டின் சுவர் லேசான சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து வழக்குப்பதிவு செய்த தெப்பக்குளம் பொலிஸார் மணிரத்னம் மற்றும் அவரது நண்பரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தெலுங்கானா

# படிக்க விருப்பம் இல்லை; மாடியில் இருந்து கீழே குதித்த சிறுமி

10ஆம் வகுப்பு மாணவியொருவர் பாடசாலைக் கட்டடமொன்றின் 3ஆவது மாடியில் இருந்து கீழே குதித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் கரீம் நகரில் உள்ள பாடசாலையொன்றிலேயே அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று கட்டடத்தின் 3ஆவது மாடியில் இருந்து அம்மாணவி கீழே குதிக்க முற்படுவதை அறிந்த சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவரை குதிக்க வேண்டாம் எனக் கூறியதாகவும், எனினும் அதனைப் பொருட்படுத்தாத அவர், மாடியில் இருந்து கீழே குதித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட பாடசாலை நிர்வாகத்தினர் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் அவருக்கு கை, கால்களில் முறிவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.




### அமைச்சரவை முடிவுகள் சில

# மூன்றாம் சுற்றுப் பேச்சு

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக 2023 ஜனவரி மாதம் 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் கொழும்பில் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை- இடம்பெற்றது.

இருதரப்பினரும் பல துறைகளில் பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவதன் மூலம் மேலும் விருத்தி செய்யக்கூடிய பொருளாதார சாத்தியவளங்கள் மற்றும் முழுமைப்படுத்த வேண்டிய பொருளாதாரக் கட்டமைப்புக்களை அடையாளங்கண்டு தற்போது காணப்படுகின்ற இருதரப்பு வர்த்தகப் பெறுமதியான 550 மில்லியன் அமெரிக்க டொலர்களை, 1.5 பில்லியன் டொலர்கள் வரைக்கும் அதிகரிக்கின்ற நோக்குடன் இப்பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, பண்டங்கள், ஆற்றல்வளம் தொடர்பான ஒழுங்குகள், சேவைகள், முதலீடுகள், பொருளாதார ஒத்துழைப்புக்கள், பொருளாதார பரிகாரங்கள், சுங்க நடவடிக்கை முறைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாகன கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக 2018.07.03 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2018 ஜூலை மாதம் முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தை இலங்கையிலும், இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 2018 செப்டெம்பர் மாதம் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் நடாத்தப்பட்டன. அதன் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 2023 ஜனவரி மாதம் 09 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்டதுடன், குறித்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

### 02. இடையிலான ஒப்பந்தம்

இலங்கை சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்தில் கையொப்பமிட்ட அரசாக எமது நாட்டில் வான்பரப்பில் பறப்பதற்காக அனைத்து விமானங்களுக்கான விமான நிலைய சேவைகள்/விமான சேவைகள், விமானப் பயணங்கள் பற்றிய தகவல் சேவைகள் மற்றும் அபாய எச்சரிக்கை சேவைகள் வழங்க வேண்டியதுடன், அதற்கான கடப்பாடுகளையும் கொண்டுள்ளது.

கொழும்பு வான்பறப்பு தகவல் வலயத்தின் தென்கிழக்கு எல்லை இலங்கை மற்றும் இந்தோனேசியா கூட்டாக பயன்படுத்தி வருகின்ற அயல் நாடாகும். குறித்த வலயத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் பொறுப்பு இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்திற்கமைய கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துவதற்காக ஆட்புல பூகோளப் பிரதேசத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்;பு அலகுகளுக்கு உள்நுழைகின்ற நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அருகிலுள்ள அரசால் அயல் நாட்டு அரசுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது அவசியமாகும். அதற்கமைய, இலங்கையில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை மற்றும் இந்தோனிசியா குடியரசின் தேசிய கண்காணிப்பு மற்றும் மீட்பு முகவர் நிறுவனத்துடன் 05 வருடகாலப்பகுதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்டது.

குறித்த காலப்பகுதி தற்போது முடிவடைந்துள்ளது. இருதரப்பினர்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்களைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில் 2023.01.23 திகதி தொடக்கம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 05 வருடங்களுக்க நீடிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. புரிந்துணர்வு ஒப்பந்தம்

பங்களாதேசம் - இலங்கை ஆகிய இருநாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, தொழிநுட்ப, மற்றும் விஞ்ஞான ரீதியான கொன்சியூலர் மற்றும் கலாசார ஒத்துழைப்புக்கள் உள்ளடக்கிய இருதரப்பு உறவுகளை ஊக்குவித்தல், பலப்படுத்தல் மற்றும் விரிவாக்கம் செய்யும் நோக்கில் பங்களாதேசம் - இலங்கை ஒருங்கிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

### 04. புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மற்றும் ஜோர்தானின் ஹஷேமயிட் இராச்சியத்தின் அரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பான அமைச்சுக்கும் இடையில் அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையில் அரசியல், பொருளாதார, கொன்சியுலர், தொழிநுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான ஒத்துழைப்புக்கள் உள்ளடங்கிய இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், பலப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. இயலளவு விருத்திக் கருத்திட்டம்

கொழும்பு நகர அதிகார இடப்பரப்பினுள் வளிமண்டல வாயு நிலைமையை முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பான ஆதாரபூர்வமான மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்தும் இயலளவு விருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அனுசரணை வழங்குவதற்கு பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கருத்திட்டத்தின் தொழிநுட்பப் பங்காளராக இலாபமீட்டாத நிறுவனமாகிய 'எயார்பரிஸ்' நிறுவனத்தின் மூலம் கருத்திட்டத்திற்கான மொத்த தொகையாக 300,000 யூரோக்கள் பெற்றுத்தரப்படும். கருத்திட்டத்தின் ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. நீர் வானூர்தி நிலைய ஒழுங்குவிதிகள்

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும் கவர்ச்சிகரமான வர்த்தமாக 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் மிதவை விமானங்களின் தொழிற்பாடுகள் (Float Plane Operations) ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது குறித்த நீர் வானூர்தி நிலைய தொழிற்பாடுகளில் ஒரு தனியார் நிறுவனம் மாத்திரம் ஈடுபட்டு வருவதுடன், எதிர்வரும் காலங்களில் குறித்த துறைசார் நடவடிக்கைகளுக்காக மேலும் பல நிறுவனங்கள் முன்வரக் கூடுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், நீர் வானூர்தி நிலைய தொழிற்பாடுகளின் தேவைகள் மேலெழுந்துள்ளன. அதற்கமைய, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சமவாயத்தின் கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகி, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 08. புதிய மதுவரிச் சட்டமூலத்தை சமர்ப்பித்தல்

மதுசாரம் மற்றும் புகையிலைப் பாவனை, அதனுடன் தொடர்புடைய வர்த்தகங்களை ஒழுங்குபடுத்துதல், குறித்த உரிமப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் வரி விதிப்பனவுகளுக்காக 1912 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளதுடன், மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டத்திற்குப் பதிலாக புதிய மதுவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவு 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த கருமத்திற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.



நியூசிலாந்து எதிர் இங்கிலாந்து:

# இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, மௌன்ட் மகட்டரேயில் நாளை காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள பகலிரவு டெஸ்ட் போட்டியுடன் தொடங்கவுள்ளது.

சூறாவளி காரணமாக இப்போட்டிக்கான தயார்ப்படுத்தல்கள் பாதிக்கப்பட்டிருந்ததுடன், முதல் நாளில் மழை இடையூறுகள் ஏற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக் குழாமிலிருந்து கைல் ஜேமிஸனும், மற் ஹென்றியும் விலகியுள்ள நிலையில், இவர்களுக்குப் பதிலாக ஜேக்கப் டஃபி, ஸ்கொட் குக்லஜின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதில் டிம் சௌதி, நீல் வக்னரோடு பிளையர் டிக்னர் அறிமுகத்தை மேற்கொள்ளும் வாய்ப்புக் காணப்பட்டாலும், துடுப்பாட்டம் காரணமாக குக்லஜினுக்கும் வாய்ப்புகள் காணப்படுகிறன.

அநேகமான சுழற்பந்துவீச்சை மிஷெல் பிறேவெல் பார்த்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் ஜேம்ஸ் அன்டர்சன், ஒலி றொபின்ஸனோடு ஸ்டூவர்ட் ப்ரோட் களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஒலி ஸ்டோனுக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## எவெர்ற்றனை வென்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, கோடி கக்போ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளதுடன், 48 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 41 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றனர். இதில் ஆர்சனல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள அதேநேரம் யுனைட்டெட் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



## ஓட்டமாவடியில் விளையாட்டுக் கழகங்களை வலுவூட்டும் நிகழ்வு

அஸ்ஹர் இப்றாஹிம்

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களை வலுவூட்டும் நிகழ்வானது ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் அண்மையில். இடம்பெற்றது.

உதவிப்பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீன் தலைமையில் விளையாட்டு உத்தியோகத்தர் ஏ. இன்ஷாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம். இம்தியாஸ் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட, பதிவுக்காக காத்திருக்கும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பதிவு செய்யப்பட்ட கழகங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களை இணைத்து ஒன்றுபட்ட அமைப்பொன்றை முன்கொண்டு செல்வதற்கான உடன்பாடும் எட்டப்பட்டது.

## சம்பியனானது பதுளை நமுனுகொல அணி

பி. கேதீஸ்

பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரனின் நிதி அனுசரணையில் நடைபெற்ற பகலிரவு கரப்பந்தாட்டத் தொடரில் பதுளை நமுனுகொல அணி சம்பியனானது.

வட்டகொடை மடக்கும்புற வடக்கிமலை தோட்ட மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற குறித்த தொடரில் சம்பியனான நமுனுகொல அணிக்கு 100,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டிருந்தது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் மிலன் சம்ப்டோரியா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சம்ப்டோரியாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 59 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளதுடன், 44 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டர் மிலன் உள்ளது. அத்லாண்டா, றோமா, ஏ.சி மிலன் ஆகியன தலா 41 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசம் காரணமாக மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களில் காணப்படுகின்றன.

# வான் பரப்பில் மர்ம பொருட்கள்

### அவர்கள் எனது ஏலியன் நண்பர்கள் தான் எலான் டுவிட்





அமெரிக்க வான்பரப்பில் கடந்த சில நாள்களாக மர்ம பலூன்கள் மற்றும் மர்ம பொருட்கள் பறந்து வரும் நிலையில், அதனை அமெரிக்க விமானப்படை வீரர்கள் சுட்டு வீழ்த்தி வருகின்றனர்.

குறிப்பாக அமெரிக்காவிற்குள் கடந்த 4-ஆம் திகதி சீன உளவு பலூன் ஒன்று நுழைந்தது. அதை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. ஆனால் அந்த பலூன் வானிலை குறித்த ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டது என சீனா தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து அலாஸ்கா மாகாண வான் எல்லைக்குள் கடந்த வெள்ளிக்கிழமையன்று இன்னொரு மர்ம பொருள் வந்த நிலையில் அதையும் அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது.

இதனையடுத்து, கடந்த சனிக்கிழமை அன்று அமெரிக்க-கனடா வான் எல்லை பகுதிக்குள் மற்றொரு மர்ம பொருள் பறந்துகொண்டிருந்தது. இதையடுத்து அதுவும் அமெரிக்க போர் விமானத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்நிலையில் உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க்,அண்மையில் இச்சம்பவத்தை எலியன்களுடன் தொடர்புபடுத்தி நகைச்சுவையான டுவிட்டரில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில் “கவலைபடாதீர்கள், எனது சில நண்பர்கள் வந்து நிற்கிறார்கள்” என்று பதிவிட்டுள்ளார்.

சமோவா




## மனைவியின் பிறந்தநாளை மறந்தால் 5 ஆண்டுகள் சிறை

மனைவியின் பிறந்தநாளை மறந்தால் 5 ஆண்டுகள் சிறைக்கு செல்ல வேண்டும் என்ற விநோத சட்டம் நியூசிலாந்துக்கு அருகில் உள்ள சமோவா தீவில் நடைமுறையில் உள்ளது.

இச்சட்டத்தின் படி மனைவியின் பிறந்தநாளை மறப்பவர்கள் முதல் முறை எச்சரிக்கைப்படுவார்கள் எனவும், அதுவே இரண்டாவது முறை தொடர்ந்தால் அவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## மெட்டா அதிரடி

அண்மைக்காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களான டுவிட்டர், அமேசான், கூகுள், ஆகிய பல்வேறு நிறுவனங்கள் தமது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன.

குறிப்பாக ஃபேஸ்புக் நிறுவனத்தின் தாய் நிறுவனமான மெட்டா ஏற்கனவே கடந்தாண்டு 11,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருந்த நிலையில், தற்போது நடப்பு ஆண்டிலும் அடுத்த சுற்று பணிநீக்கம் செய்யப் போவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இப்புதிய பணிநீக்கங்கள் தொடர்பாக மெட்டா கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை என்றாலும், மேலாளர் உட்பட ஒரு சில பணியில் இருப்பவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## திருமணத்தில் மணமகனின் முன்னாள் காதலிகள் போராட்டம்

சீனாவின் யுகான் மாகாணத்தில் சென் என்பவர் வசித்து வருகின்றார். இவருக்கு கடந்த 6 ஆம் திகதி திருமணம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது

இந்நிலையில் திடீரென அங்கு வந்த பெண்கள் சிலர், கையில் பதாகைகளை ஏந்திய வண்ணம் சென்னுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். தாம் சென்னின் முன்னாள் காதலிகள் எனவும், பெண்களை ஏமாற்றாதீர்கள். அவர்களிடம் எப்பொழுதும் நேர்மையாக இருங்கள். அவர்களை பழிவாங்க நினைத்தால் உங்களின் நிலைமை என்னவாகும் என்றனர்.

சீனா



## 3 லட்சம் வாகனங்களை ஏற்றுமதி செய்தது சீனா

சீனாவில் இருந்து உலக நாடுகளுக்கு கடந்த ஜனவரி மாதம் மாத்திரம் சுமார் 3 லட்சம் வாகனங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதுமட்டுமல்லாது முக்கிய ஆட்டோமொபைல் ஏற்றுமதி முனையங்களாக உள்ள ஷாங்காய் ஹைடாங் துறைமுகம் மற்றும் நங்காங் துறைமுகங்கள் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே பரபரப்பாக இயங்கி வருவதாகவும், அங்கு பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, வாகன நிறுவனங்களிலிருந்து துறைமுகத்திற்கு நாள்தோறும் வாகனங்கள் வந்தவண்ணம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நியூஸிலாந்து



## இருளில் மூழ்கியது நியூஸிலாந்து

நியூஸிலாத்தில் ஏற்பட்டுள்ள காப்ரியேல் புயல் காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் மின்சாரம் இன்றி தவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் நாடு முழுவதும் நூற்றுக்கும் அதிகமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், புயலால் ஏற்பட்ட சேதத்தின் அளவு வெளியானதைத் தொடர்ந்து அங்கு நாடு முழுவதும் தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் வரலாற்றில் 3ஆவது முறையாக தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

## விண்வெளிக்கு செல்லும் முதல் சவுதி அரேபிய வீராங்கனை



முதன்மு றையாக ரயானா பர்ணா என்ற விண்வெளி வீராங்கனையை விண்வெளிக்கு அனுப்ப சவுதி அரேபிய அரசு திட்டமிட்டுள்ளது.

ரயானா பர்ணாவியுடன் சக நாட்டைச் சேர்ந்த விண்வெளி வீரர் அலி அல் கர்னி உள்பட 4 பேர், AX-2 விண்வெளி பயணத்தில் இணையவுள்ளார்.

இவர்கள் பயணிக்க உள்ள விண்கலம், அமெரிக்காவில் இருந்து ஏவப்பட உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் கார் செலுத்துவதற்கு அனுமதியளித்த சவூதி அரசு, அடுத்த நான்கே ஆண்டுகளில் விண்வெளி பயணித்திற்கான அனுமதி வழங்கியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 15 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.